## மலைவாழ் பழங்குடியின கூலித்தொழிலாளர்களை

# செம்மரம் வெட்ட அழைத்துச்செல்லும் புரோக்கர்கள் மீது நடவடிக்கை

## மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்

தர்மபுரி, டிச.13: செம்மரம் வெட்ட அழைத்துச் செல்லும் புரோக்கர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆந்திரா வனத்துறையினரால் கொலை செய்யப்பட்ட 2 கூலித் தொழிலாளிகளின் குடும்பத்திற்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்று மக்கள் கண்காணிப்பக இயக்குனர் வக்கீல் ஹென்றி திபேன் அரசுக்கு கோரிக்கைவிடுத்துள்ளார்.

தர்மபுரி மாவட்டம் சித்தேரி பகுதியை சேர்ந்த ராமன், பாலகிருஷ்ணன் ஆகியோர் ஆந்திராவிற்கு செம்மரம் வெட்ட சென்ற இடத்தில் இறந்தனர். கடந்த 27ம் தேதி ராமன் சடலம் சித்தேரியில் ஒரு டெய்லர் கடை முன் வீசப்பட்டு கிடந்தது. பாலகிருஷ்ணன் சடலம் ஆந்திராவில் விபத்தில் இறந்ததாக அவரது மனைவிக்கு தெரியாமல் அடக்கம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தை மதுரையை சேர்ந்த மக்கள் கண்காணிப்பகம் உண்மை கண்டறியும் குழு அமைத்துகள ஆய்வு செய்தது. இந்த ஆய்வில் திரட்டப்பட்ட விஷயங்களை, 64 பக்க அறிக்கையாக தயார் செய்து நேற்று தர்மபுரியில் வெளியிட்டனர்.



மக்கள் கண்காணிப்பக நிறுவனரும், இயக்குனருமான வக்கீல் ஹென்றி திபேன் நிருபர்களிடம் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டம், சித்தேரி மலை கிராமத்தை சேர்ந்த ராமன்(40) மற்றும் பாலகிருஷ்ணன்(45) ஆகிய கூலித் தொழிலாளிகள் இருவரும், கடந்த 26ம் தேதி ஆந்திர வனத்துறையினரால் திட்டமிட்டு கொல்லப்பட்டிருக்கின்றனர். சம்பந்தபட்ட இந்த குடும்பத்தினருக்கு உடனடியாக, தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும். இருவர் இறப்பு சம்பவத்தில், ஏடிஜிபி அந்தஸ்தில் உள்ள நேர்மையான உயர் காவல் துறை அதிகாரி நியமித்து, ஆந்திரா வனத்துறை அதிகாரிகளுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய வேண்டும்.நாங்கள் பல இடங்களுக்கு நேரில் சென்று, பாதிக்கபட்டவர்களை நேரில் சந்தித்தும் பல்வேறு ஆதாரங்களுடன் புலனாய்வு செய்து, 64 பக்க அறிக்கையினை தயார் செய்துள்ளோம். அந்த அறிக்கையை ஊடகங்கள் வாயிலாக முதலில் வெளியிட்டுள்ளோம். இதனைத்தொடர்ந்து சம்பந்தபட்ட துறை அதிகாரிகள், முதல்வருக்கு அறிக்கையை சமர்பிக்க உள்ளோம். அரசு உரிய முறையில் விசாரணை நடத்தி, நடந்தது என்ன என்பது குறித்து முழு உண்மையை வெளிக்கொண்டு வரவேண்டும். அப்பாவி மலைவாழ் பழங்குடியின கூலித்தொழிலாளர்களை, ஆசை வார்த்தைகளை கூறி செம்மரம் வெட்ட அழைத்து செல்லும் புரோக்கர்களை கண்டுபிடித்து, காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு கூறினார்.

> இருவர் இறப்பு சம்பவத்தில், ஏடிஜிபி அந்தஸ்தில் உள்ள நேர்மையான உயர் காவல்துறை அதிகாரி நியமித்து, ஆந்திரா வனத்துறை அதிகாரிகளுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய வேண்டும். .நாங்கள் பல இடங்களுக்கு நேரில் சென்று, பாதிக்கபட்டவர்களை நேரில் சந்தித்தும் பல்வேறு ஆதாரங்களுடன் புலனாய்வு செய்து, 64 பக்க அறிக்கையினை தயார் செய்துள்ளோம்.